**SIB** ஒன் கோ-பிராண்டட் கிரெடிட்கார்டு மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (**MITC**)

**23 செப்டம்பர் 2024** முதல்

<u>SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (தமிழில்)</u>

இந்த மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், தி சவுத் இந்தியன் பேங்க் லிமிடெட் (வங்கி) வழங்கும் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டுக்கும், அதன் இணை பிராண்டிங் கூட்டாளரான ஒன் கன்ஸ்யூமர் சர்வசீஸ் பிரைவேட் லிமிடெட் (ஒரு இணை முத்திரை கிரெடிட் கார்டு) உடன் இணைந்து பிராண்டட் பார்ட்னர்ஷிப்பிற்கும் பொருந்தும்.

ஒன்கார்டு செயலியிலிருந்து உங்கள் கார்டைச் செயல்படுத்தினால் அல்லது 'சமர்ப்பிக்கவும்' அல்லது 'நான் நான் ஒப்புக்கொள்கிறேன் அல்லது அதைப் போன்ற ஏதேனும் டேப் பட்டன் /ஐகானைக் கிளிக் செய்தால், கீழ்க்காணும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கார்டுதாரர் / கார்டு உறுப்பினர்/பயனர் ("நீங்கள்") ஏற்றுக் கொள்வதாக அர்த்தமாகும்.

இந்த MITC-கள், விரிவான <u>விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன்</u> சேர்த்துக் கூடுதலாக இருக்கும், இவற்றை அவற்றுடன் சேர்த்து படிக்க வேண்டும். இவை அவ்வப்போது மாற்றங்களுக்கு உட்பட்டவை. வங்கியின் இணையதளத்திலும், ஒன்கார்டு செயலியிலும் மிகச் சமீபத்திய பதிப்பு எப்போதும் கிடைக்கும்.

வசதியான உலகத்திற்கு வரவேற்கிறோம்!

OneCard மொபைல் பயன்பாடு 📱

சக்திவாய்ந்த OneCard மொபைல் பயன்பாட்டின் மூலம், SIB One இணை-பிராண்டட் கிரெடிட் கார்டின் முழுக் கட்டுப்பாட்டையும் நீங்கள் பெறலாம், நீங்கள் பெறும் சில நன்மைகள்:

உங்கள் செயலியின் PIN-ஐ அமைத்தல்
உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டை செயல்பாட்டிற்கு கொண்டு வருதல்

கிரெடிட் கார்டு பில்களுக்குப் பணம் செலுத்துதல்

உங்கள் விர்ச்சுவல் கிரெடிட் கார்டை நிர்வகித்தல்

உங்கள் கிரெடிட் மற்றும் ரொக்க பணம் எடுத்தல் வரம்புகளைக்

கட்டுப்படுத்துதல்

ஆன்லைன், உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பயன்பாட்டை இயக்குதல்

உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு PIN எண்ணை அமைத்தல் (பாயின்ட் ஆஃப் சேல் மற்றும் ATM-களில் பயன்படுத்துவதற்கு)

உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டின் ஏதேனும் அம்சம் குறித்த சர்ச்சைகள் அல்லது சேவை பற்றிய சந்தேகங்களை எழுப்புதல்

உங்கள் ஓவர் லிமிட் பரிவர்த்தனைகளைக் கட்டுப்படுத்துதல்

நீங்கள் விரும்பும் அங்கீகார முறை (கைரேகை/PIN எண்) மூலம் உங்களை நீங்கள் அங்கீகரித்த பிறகு, பாதுகாப்பான சூழலில் மட்டுமே மேற்கண்ட பரிவர்த்தனைகளை நீங்கள் மேற்கொள்ளலாம் என்பதை நாங்கள் உறுதி செய்துள்ளோம். ஒரு கார்டுதாரராக, ஒன்கார்டு செயலியில் நீங்கள் மேற்கொள்ளும் செயல்களுக்கு நீங்களே பொறுப்பாவீர்கள் என்பதால், அம்சங்கள் மற்றும் இந்தப் பரிவர்த்தனைகளின் தாக்கம் குறித்து நீங்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

விர்ச்சுவல் கிரெடிட் கார்டு

அச்சிடப்பட்ட SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டுடன் சேர்த்துக் கூடுதலாக, ஆன்-போர்டிங் செயல்முறையின் ஒரு பகுதியாக ஒன்கார்டு செயலியில் கிடைக்கும் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டின் விர்ச்சுவல் பதிப்பையும் நீங்கள் பெறுவீர்கள்.

இந்த விர்ச்சுவல் கார்டும் VISA மூலம் இயங்கும் கிரெடிட் கார்டாகும். எனவே எந்த ஆன்லைன் அல்லது மொபைல் செயலி சார்ந்த பரிவர்த்தனைகளுக்கும் இதை நீங்கள் பயன்படுத்தலாம். தொழில்துறை தரநிலைகளுக்கேற்ப பாதுகாப்பு அளவுருக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**A)** கட்டணங்கள் மற்றும் கட்டண விதிப்புகள்

உங்கள் வாழ்க்கையை எளிதானதாக வைத்திருப்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம், அதை நோக்கிய எங்கள் முயற்சியை எங்கள் கட்டணங்கள் பிரதிபலிக்கின்றன.
உங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கிரெடிட் வரம்பிற்குள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி, தவணைத் தேதிக்குள் முழு நிலுவைத் தொகையையும் நீங்கள் செலுத்தி விட்டால், உங்களுக்கு எந்தக் கட்டணமும் நாங்கள் விதிக்க மாட்டோம். இருப்பினும், பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டால் அல்லது பகுதியளவு மட்டும் பணம் செலுத்தினால் அல்லது வரம்பிற்கு மேல் உங்கள் கார்டைப் பயன்படுத்தினால், சில கட்டணங்கள் விதிக்கப்படும்.

அந்தக் கட்டணங்களின் பட்டியல் இங்கே:

## கட்டண அட்டவணை

| Sr.A | கட்டணங்கள் மற்றும் கட்டண விதிப்புகள் | யூனிட் கட்டணம் |
|---|---|---|
| 01 | முதன்மை அல்லது ஆட்-ஆன் கார்டுதாரருக்கான சேர்க்கைக் கட்டணம் | இல்லை |
| 02 | முதன்மை அல்லது ஆட்-ஆன் கார்டுதாரருக்கான ஆண்டு உறுப்பினர் கட்டணம் | இல்லை |
| 03 | வெளியீடு கட்டணம் (முதன்மை)<br>வெளியீடு கட்டணம் (ஆட்-ஆன் கார்டுதாரர்)<br>பிளாஸ்டிக் கார்டு<br>மெட்டல் கார்டு | இல்லை<br>-<br>இல்லை<br>Rs.3000/- |
| 04 | கார்டு ரத்துசெய்தல் கட்டணம்<br>*விர்ச்சுவல் கார்டு செயல்படுத்தப்பட்ட 6 மாதங்களுக்குள் ரத்துசெய்யப்பட்டால் | **முதன்மை கார்டுதாரர்**<br>• மெட்டல் கார்டு Rs.3000/-<br>• பிளாஸ்டிக் கார்டு Rs.500/-<br><br>**ஆட்-ஆன் கார்டுதாரர் •**<br>• மெட்டல் கார்டு இல்லை<br>• பிளாஸ்டிக் கார்டு Rs.500/- |
| 05 | **பரிவர்த்தனை அடிப்படையிலான சேவைக் கட்டணங்கள்**<br>• ரிவார்டுகள் ரெடம்ஷன் கட்டணம்<br>• அந்நியச் செலாவணி மார்க்-அப் கட்டணம்<br><br>• ஓவர் லிமிட் கட்டணம்<br><br><br><br><br>**வாடகைப் பரிவர்த்தனை கட்டணம்**<br>• மூன்றாம் தரப்பு வணிகர்கள்<br>• ஒன்கார்டு இன்-ஆப் வாடகைக் கட்டணம்<br><br>வாடகை வசதிக் கட்டணம்<br>எரிபொருள் சர்சார்ஜ் தள்ளுபடி<br><br><br>Rs.10,000/- அல்லது அதற்கு மேற்பட்ட மொத்த செலவழிப்பில் வாலட் பதிவேற்றம்/பரிமாற்றக் கட்டணம் | இல்லை<br>பரிவர்த்தனைத் தொகையில் 1%<br><br>ஓவர் லிமிட் தொகையில் 2.5% (குறைந்தபட்சம் * Rs.400/-) 21.07.2024 வரை பொருந்தும்<br>22.07.2024 முதல் ஓவர் லிமிட் தொகையில் 2.5% (குறைந்தபட்சம் * Rs.500/-) பொருந்தும்<br><br>பரிவர்த்தனைத் தொகையில் 1%<br>பரிவர்த்தனை தொகையில் 0%<br><br>பரிவர்த்தனை தொகையில் 2%<br>பரிவர்த்தனை தொகையில் 1% , இது அதிகபட்சமாக Rs.400/- வரை என வரம்பிடப்பட்டுள்ளது<br><br>பரிவர்த்தனைத் தொகையில் 1% |
| 06 | **கார்டு மாற்றுதல் கட்டணம்** | 1வது பிளாஸ்டிக் கார்டு - இல்லை<br>2வது பிளாஸ்டிக் கார்டு - Rs.145/-<br>3வது பிளாஸ்டிக் கார்டு முதல் - Rs.500/-<br>மெட்டல் கார்டு- Rs.3000/- |
| 07 | வட்டி இல்லாத காலகட்டம்** | 48 நாட்கள் வரை |
| 08 | வட்டி விகிதம் | 21.07.2024 வரை மாதம் ஒன்றுக்கு 3.49% பொருந்தும்<br>21.07.2024 வரை ஆண்டு ஒன்றுக்கு 41.88% பொருந்தும்<br><br>மாதம் ஒன்றுக்கு 3.75% பொருந்தும்<br>22.07.2024 முதல்<br>ஆண்டு ஒன்றுக்கு 45% பொருந்தும்<br>21.07.2024 வரை பொருந்தும் |
| 09 | தாமத பேமெண்ட் கட்டணங்கள் | *21.07.2024* வரை பொருந்தும்<br><br>**நிலுவைத் தொகை** **கட்டணம்**<br>Rs.0-99/- Rs.0/-<br>Rs.100-1000/- Rs.100/-<br>Rs.1001-5000/- Rs.250/-<br>Rs.5001-10000/- Rs.750/-<br>Rs.10001-50000/- Rs.1000/-<br>Rs.50001/- மற்றும் அதற்கு மேல் Rs.1200/-<br><br>*22.07.2024* முதல் பொருந்தும்<br><br>**நிலுவைத் தொகை** **கட்டணம்**<br>Rs.0-250/- Rs.0/-<br>Rs.251-1000/- Rs.250/-<br>Rs.1001-5000/- Rs.500/-<br>Rs.5001-25000/- Rs.1000/-<br>Rs.25001/- மற்றும் அதற்கு மேல் Rs.1250/- |
| **Sr.B** | **எடுக்கும் வரம்புகள்** | - |
| 01 | கடன் வரம்பு | ஒன்கார்டு செயலியில் தெரிவதற்கேற்ப |
| 02 | கிடைக்கும் கடன் வரம்பு | ஒன்கார்டு செயலியில் தெரிவதற்கேற்ப |

கட்டணங்கள், வட்டி மற்றும் பிற கட்டணங்கள் அனைத்திற்கும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) பொருந்தும். அது இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்படும் போது, அதற்கேற்ப மாற்றத்திற்கு உட்பட்டது.

** வட்டி இல்லாத காலகட்டம்

முந்தைய மாத நிலுவைத் தொகை முழுவதையும் நீங்கள் செலுத்தவில்லை என்றால், வட்டி இல்லாத காலகட்ட வசதி உங்களுக்குக் கிடைக்காது என்பதை நினைவில் கொள்ளவும்.

*** வட்டி விகிதம்

ஒவ்வொரு நாளின் இறுதியிலும், தினசரி வட்டிக் கட்டணத்தைக் கணக்கிடுவதற்காக தற்போதைய இருப்பு/ நிலுவைத் தொகையானது தினசரி வட்டி விகிதத்தால் பெருக்கப்பட்டு, பின்னர் அது உங்கள் நிலுவைத் தொகையில் சேர்க்கப்படும். அதற்கான எளிய சூத்திரம் பின்வருமாறு இருக்கும்: ((நாட்களின் எண்ணிக்கை X மொத்த நிலுவைத் தொகை X (மாதம் ஒன்றுக்கான வட்டி விகிதம் x 12 மாதங்கள்))/ 365 நாட்கள். தற்போது, அனைத்து SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு உறுப்பினர்களுக்கும், அவர்கள் செலுத்தாத தவணைகளுக்கான வட்டி விகிதம் ஆண்டு ஒன்றுக்கு 41.88% அல்லது மாதம் ஒன்றுக்கு 3.49% ஆக உள்ளது. 22 ஜூலை 2024 முதல், அனைத்து SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு உறுப்பினர்களுக்கும், அவர்கள் செலுத்தாத தவணைகளுக்கான வட்டி விகிதம் ஆண்டு ஒன்றுக்கு 45% அல்லது மாதம் ஒன்றுக்கு 3.75% ஆக உள்ளது.

மாதிரி விளக்கம் **1 (**தவணைகள் முழுமையாகச் செலுத்தப்படவில்லை**)**

வாங்குதல்: 15 ஜனவரி 2021 அன்று Rs.10,000/-

அறிக்கைத் தேதி: 01 பிப்ரவரி 2021

மொத்த தவணைத் தொகை: Rs.10,000/-

பேமெண்ட் தவணைத் தேதி: 18 பிப்ரவரி 2021

பேமெண்ட் செலுத்தப்பட்டது: 10 பிப்ரவரி 2021 அன்று Rs.500/- பிப்ரவரியில் வேறு பரிவர்த்தனைகள் எதுவும் இல்லை. மேற்கண்ட சூத்திரத்தின்படி, பின்வருமாறு வட்டி விதிக்கப்படும்:

| நிலுவை | காலகட்டம் | நாட்களின் எண்ணிக்கை | கணக்கீடு | வட்டி (Rs.) |
|---|---|---|---|---|
| Rs. 10,000 | 01-09 பிப்ரவரி | 9 | (9×10000 × (3.75 / 100 × 12)) / 365 | Rs.110.96/- |
| Rs. 10,000 | 15-31 ஜனவரி | 17 | (17×10000 × (3.75 / 100 × 12)) / 365 | Rs.209.59/- |
| Rs. 10,000 | 10-28 பிப்ரவரி | 19 | (19×9500 × (3.75 / 100 × 12)) / 365 | Rs.222.53/- |
| **வட்டி வசூலிக்கப்பட்டது** | **Rs. 543.08/-** | | | |

விதிக்கப்படும் இந்த வட்டியின் மீது, அதாவது Rs.97.75/- மீது நடப்பு விகிதத்தில் (தற்போது 18%) சரக்கு மற்றும் சேவை வரி (GST) விதிக்கப்படும்.
அது நிலுவைத் தொகையுடன் சேர்க்கப்படும். எனவே, 01 மார்ச் 2021 அன்று உங்கள் அறிக்கையில், மொத்த நிலுவைத் தொகை **Rs.10,140.84/-** (Rs.9,500 + Rs.543.08 + **Rs.97.75**) ஆக இருக்கும்

மாதிரி விளக்கம் **2 (**சுழற்றப்பட்ட தவணைகள்**,** புதிய வாங்குதல்**)**

அறிக்கைத் தேதி: 01 மார்ச் 2021

மொத்த நிலுவைத் தொகை:

பேமெண்ட் தவணைத் தேதி: 18 மார்ச் 2021

பேமெண்ட் செலுத்தப்பட்டது: 10 மார்ச் 2021 அன்று Rs.500/- புதிய வாங்குதல்: 20 மார்ச் 2021 அன்று Rs.5,000/-

பின்வருமாறு வட்டி விதிக்கப்படும்:

| நிலுவை | காலகட்டம் | நாட்களின் எண்ணிக்கை | கணக்கீடு | வட்டி (Rs.) |
|---|---|---|---|---|
| Rs. 9,927.23 | 01-09 பிப்ரவரி | 9 | (9×9927.23 × (3.75 / 100 × 12)) / 365 | Rs.110.15/- |
| Rs. 9,427.23 | 10-19 மார்ச் | 10 | (10×9427.23 × (3.75 / 100 × 12)) / 365 | Rs.116.23/- |
| Rs. 14,427.53 | 20-29 மார்ச் | 12 | (12×14427.53 × (3.75 / 100 × 12)) / 365 | Rs.213.45/- |
| **வட்டி வசூலிக்கப்பட்டது** | **Rs. 439.83/-** | | | |

விதிக்கப்படும் இந்த வட்டியின் மீது, அதாவது Rs.79.17/- மீது நடப்பு விகிதத்தில் (தற்போது 18%) சரக்கு மற்றும் சேவை வரி (GST) விதிக்கப்படும்.
அது நிலுவைத் தொகையுடன் சேர்க்கப்படும். எனவே, 01 ஏப்ரல் 2020 அன்று உங்கள் அறிக்கையில், மொத்த நிலுவைத் தொகை **Rs.14,910.24/-** (Rs.14,427.23/- + Rs. 439.83/- + Rs.79.17/-) ஆக இருக்கும்

குறிப்பு: இந்த விளக்கங்கள் எடுத்துக்காட்டு நோக்கங்களுக்காகவும், எவ்வாறு

வட்டி கணக்கிடப்பட்டு, வசூலிக்கப்படுகிறது என்பதைக் காட்டுவதற்காகவும் மட்டுமே ஆகும். குறிப்பிட்ட நிகழ்வுகளைப் பொறுத்து உண்மையான தொகைகள் வேறுபடலாம்.

குறைந்தபட்ச தவணைத் தொகை என்பது நிகர பற்றுகள் + வரம்பிற்கு மேல் உள்ள முழுத் தொகை + EMI வட்டி, கட்டணங்கள் மற்றும் வரிகளை உள்ளடக்கிய, அந்த மாதத்திற்கு பில் செய்யப்படும் EMI + முந்தைய அறிக்கை செலுத்தப்படாத குறைந்தபட்ச தவணைத் தொகைகள் (ஏதேனும் இருந்தால்) ஆகியவற்றின் மாறுபடும் சதவீதமாகும்.

குறைந்தபட்ச தவணைத் தொகையின் மாறுபடும் சதவீதம் (5% - 100%) வரை இருக்கலாம். அது கார்டுதாரரின் திருப்பிச் செலுத்தும் நிலையை அடிப்படையாகக்

கொண்டதாகும்.

****தாமத பேமெண்ட் கட்டணம்

பேமெண்ட் தவணைத் தேதியில் பேமெண்ட்டைச் செலுத்தவில்லை என்றாலோ அல்லது குறைந்தபட்சத் தொகையை விட குறைவாகப் பேமெண்ட் செலுத்தினாலோ, தாமத பேமெண்ட் கட்டணம் வசூலிக்கப்படும். தாமத பேமெண்ட் கட்டணமானது, கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கார்டு உறுப்பினரின் நிலுவைத் தொகையின் அடிப்படையில் விதிக்கப்படும்.

21 ஜூலை 2024 வரை பொருந்தும்

| தாமத பேமெண்ட் கட்டணங்கள் | |
|---|---|
| **நிலுவைத் தொகை** | **கட்டணம்** |
| Rs. 0-99/- | Rs. 0/- |
| Rs.100-1001/- | Rs. 100/- |
| Rs. 1001-5000/- | Rs. 250/- |
| Rs.5001-10,000/- | Rs. 750/- |
| Rs. 10,001-50,000/- | Rs. 1000/- |
| Rs. 50,000/- மற்றும் அதற்கு மேல் | Rs. 1200/- |

22 ஜூலை 2024 முதல் பொருந்தும்

| தாமத பேமெண்ட் கட்டணங்கள் | |
|---|---|
| **நிலுவைத் தொகை** | **கட்டணம்** |
| Rs. 0-250/- | Rs. 0/- |
| Rs. 251-1000/- | Rs. 250/- |
| Rs. 1001-5000/- | Rs.500/- |
| Rs.5001-25,000/- | Rs. 1000/- |
| Rs. 25000/- மற்றும் அதற்கு மேல் | Rs. 1250/- |

தாமத பேமெண்ட் கட்டணம்

நிலுவைத் தொகை

உதாரணம்:

மொத்த தவணைத் தொகை (TAD) Rs.5,000/- மற்றும் பேமெண்ட் தவணைத் தேதி 4 மே 2020 என்று எடுத்துக் கொண்டால், கார்டுதாரர் பேமெண்ட் தவணைத் தேதிக்குள்

குறைந்தபட்ச தவணைத் தொகையை செலுத்தவில்லை என்றால், அடுத்த பில் தவணைத் தேதியில் தாமத பேமெண்ட் கட்டணமாக Rs.500/- விதிக்கப்படும். நடைமுறையில் உள்ள கட்டணத்தின்படி, நிலுவைத் தொகை Rs.1001-.5000/- -க்குள் இருந்தால், தாமத பேமெண்ட் கட்டணமாக Rs.500/- விதிக்கப்படும்.

ஓவர் லிமிட் கட்டணம்:

தற்போது, பரிவர்த்தனை செய்யும் போது அல்லது வணிகரிடம் இருந்து செட்டில்மெண்ட் தொகையைப் பெறும் போது, வழங்கப்பட்ட கடன் வரம்பை கார்டு உறுப்பினர் மீறும் போது, அந்த ஓவர் லிமிட் தொகையில் 2.5% அல்லது Rs.400/- (எது அதிகமாக இருக்கிறதோ அது) ஓவர் லிமிட் கட்டணம் விதிக்கப்படுகிறது. கார்டு உறுப்பினர் செயலியின் மூலம் ஓவர் லிமிட் கார்டு கட்டுப்பாட்டை இயக்கியிருந்தால் மட்டுமே ஓவர் லிமிட் பரிவர்த்தனை அனுமதிக்கப்படும்.

22 ஜூலை 2024 முதல், பரிவர்த்தனை செய்யும் போது அல்லது வணிகரிடம் இருந்து செட்டில்மெண்ட் தொகையைப் பெறும் போது, வழங்கப்பட்ட கடன் வரம்பை கார்டு உறுப்பினர் மீறும் போது, அந்த ஓவர் லிமிட் தொகையில் 2.5% அல்லது Rs.500/- (எது அதிகமாக இருக்கிறதோ அது) ஓவர் லிமிட் கட்டணம் விதிக்கப்படுகிறது.

அன்னியச் செலாவணி மார்க்-அப் கட்டணம்:

வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனை செய்வதற்கு உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தினால், செட்டில்மெண்ட் தேதியில் அந்தப் பரிவர்த்தனை தொகை இந்திய ரூபாய்க்கு (INR) மாற்றப்படும். இது உங்கள் பரிவர்த்தனை தேதியிலிருந்து வேறுபட்டிருக்கலாம். பரிவர்த்தனை USD (அமெரிக்க டாலர்கள்) -இல் இல்லை என்றால், அந்தத் தொகை முதலில் USD ஆக மாற்றப்படும், பின்னர் USD தொகை VISA வழங்கிய விகிதத்தின்படி INR ஆக மாற்றப்படும். இந்தத் தொகை மீது அந்நியச் செலாவணி மார்க்-அப் கட்டணம் விதிக்கப்படும், இந்த மார்க்-அப் கட்டணத்திற்கு GST பொருந்தும். அந்தப் பரிவர்த்தனை 30 நாட்களுக்குள் திரும்பப் பெறப்பட்டால், இந்த மார்க்-அப் கட்டணம் மற்றும் GST ஆகியவை கார்டுதாரருக்கு திருப்பி வழங்கப்படும். இந்தியாவிற்கு வெளியே உள்ள வணிகர் அல்லது பேமெண்ட் முறையில் இந்திய ரூபாயில் (INR) பரிவர்த்தனை செய்யப்பட்டாலும், அந்நியச் செலாவணி மார்க்-அப் கட்டணம் விதிக்கப்படும்.

*EMI* மாற்றுதல்*:*

ஏதேனும் பரிவர்த்தனையை சமமான மாதாந்திரத் தவணையாக (EMI) மாற்ற நீங்கள் விரும்பினால், அந்த EMI -களின் பொருந்தக்கூடிய கட்டணங்கள் மற்றும் விவரங்கள் ஆகியவை EMI
விதிமுறைகளாலும், நிபந்தனைகளாலும் நிர்வகிக்கப்படும். எரிபொருள்

சர்சார்ஜ் தள்ளுபடி*:*

உள்நாட்டில் எரிபொருளுக்குப் பணம் செலுத்துவதற்காக SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டை நீங்கள் பயன்படுத்தும் போது, வாங்குபவர் (வணிகரின் வங்கி வழங்கிய முனையம்) மூலம் எரிபொருள் சர்சார்ஜ் கட்டணம் விதிக்கப்படும். சர்சார்ஜ் தள்ளுபடியானது, பரிவர்த்தனை தொகையில் 1% அல்லது விதிக்கப்பட்ட உண்மையான சர்சார்ஜ் (GST தவிர்த்து) இதில் எது குறைவோ, அதுவாக இருக்கும். SIB ஒன்
கோ-பிராண்டட் கிரெடிட் கார்டில் மேற்கொள்ளப்படும் எரிபொருள் பரிவர்த்தனைகளுக்கான அதிகபட்ச எரிபொருள் சர்சார்ஜ் தள்ளுபடியானது, ஒரு காலண்டர் மாதத்திற்கு அதிகபட்சம் Rs.400/- என வரையறுக்கப்பட்டுள்ளது. அந்தத் தள்ளுபடியில் அந்த வாங்குதலுக்குச் செலுத்தும் பொருந்தக்கூடிய வரி சேர்க்கப்படாது. எரிபொருள் பரிவர்த்தனையில் ரிவார்டு புள்ளிகள் சேர்க்கப்படாது.

B) எடுக்கும் வரம்புகள்

உங்கள் கடன் வரம்பு மற்றும் பணம் எடுக்கும் வரம்பு இரண்டும் மாறக் கூடியவையாகும். இந்த வசதிக்கு நீங்கள் தகுதி பெற்றிருந்தால், ஒன்கார்டு செயலி மூலம் உங்கள் கடன் வரம்பை அதிகரிக்குமாறு நீங்கள் கோரலாம். ஒப்புதல் அளிக்கப்பட்டதும், அந்தத் திருத்தப்பட்ட தொகை உங்களின் புதிய கடன் வரம்பாக இருக்கும்.

உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு பயன்பாட்டின் அடிப்படையில், கடன் வரம்பை அதிகரிக்குமாறு ஒன்கார்டு செயலிக்குள் உங்களுக்குப் பரிந்துரைக்கும் உரிமை வங்கிக்கு உள்ளது. அந்தப் பரிந்துரையை ஏற்றுக்கொள்ளும் முன்னர் பரிசீலிப்பதற்காக அந்தப் பரிந்துரையும், அதனுடன் தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் உங்களுக்குக் கிடைக்குமாறு செய்யப்படும்.

ஒன்கார்டு செயலியில் காண்பிக்கப்படும் கடன் வரம்பு அதிகரிப்பு தொடர்பான விதிமுறைகளை நீங்கள் படித்து, ஏற்றுக் கொண்டு வரம்பை அதிகரிக்க உங்கள் ஒப்புதலை வழங்கியதும், அதன் அமைப்புகள் மூலம் உங்கள் கார்டின் கடன் வரம்பு அதிகரிக்கப்படும். வரம்பு அதிகரிப்பை நீங்கள் குறிப்பாக சரிபார்த்து, MITC-க்கு ஒப்புதல் அளிக்கக் கூடிய ஒன்கார்டு செயலியில் எலக்ட்ரானிக் முறைகள் மூலம் பெற்ற வரம்பு அதிகரிப்புப் பரிந்துரையை நீங்கள் ஏற்றுக்கொண்டால், அது ஒப்புதலாகக் கருதப்படும்.

வங்கி மற்றும் / அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்கள் அந்த ஒப்புதலின் டிஜிட்டல் பதிவுகளை வைத்திருப்பார்கள். எதிர்காலத்தில் வரம்பு அதிகரிப்பு தொடர்பாக ஏதேனும் சர்ச்சை ஏற்பட்டால் அதை ஒப்புதலுக்கான சான்றாகக் கருதுவார்கள்.

வங்கி அவ்வப்போது உங்கள் கணக்கை மதிப்பாய்வு செய்து. உங்கள் பரிவர்த்தனை முறைகள், திருப்பிச் செலுத்தும் நடத்தை மற்றும் பிற உள்ளக அளவுகோல்களின் அடிப்படையில் உங்கள் கடன் வரம்பைக் குறைக்கின்ற உரிமையைக் கொண்டிருக்கும். ஒன்கார்டு செயலி மற்றும்/அல்லது மின்னஞ்சல் மற்றும் SMS மூலம் உங்களுக்கு அது தெரிவிக்கப்படும்.

"கிடைக்கும் கடன் வரம்பு" அல்லது "கிடைக்கும் ரொக்க வரம்பு" என்பது, முறையே நீங்கள் வாங்குதல்களைச் செய்யக் கூடிய அல்லது ATM -இல் பணம் எடுக்கக் கூடிய வரம்பைக் குறிக்கும். ரொக்க வரம்பு என்பது, அந்த நேரத்தில் கார்டுதாரர்களுக்கு கிடைக்கவில்லை என்றாலும், உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த கடன் வரம்பின் ஒரு பகுதியாக இருக்கும். அது இயக்கப்பட்டவுடன் ஒரு அறிவிப்பு வழங்கப்படும்.

**C)** பில்லிங்

**i)** பில்லிங் அறிக்கைகள் (கால இடைவெளி மற்றும் அனுப்பும் முறை)

உங்கள் பில்லிங் அறிக்கையானது, ஒவ்வொரு மாதமும் ஒன்கார்டு செயலியில் காண்பிக்கப்படும் பில்லிங் தேதியில் உருவாக்கப்படும். செயலியில் உள்ள சுயவிவரப் பிரிவில் உங்கள் வசதிக்கேற்ப ஒருமுறை நீங்கள் அதை மாற்றியமைத்துக் கொள்ளலாம். ஒன் கார்டு செயலியில் நீங்கள் இந்த அறிக்கையைப் பார்க்கலாம். அதில் அனைத்து வாங்குதல்கள், ரீபேமெண்ட்கள், கட்டணங்கள், வட்டிக் கட்டணங்கள், ரீஃபண்டுகள் மற்றும் வரிகள் ஆகிய விவரங்கள் இடம்பெற்றிருக்கும். ஒரு மாதத்தில் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தவில்லை என்றால், அந்த மாதத்தில் எந்தச் செலவினங்களும் இல்லை என்று அறிக்கையில் குறிப்பிடப்படும். இந்த அறிக்கையை PDF வடிவத்தில் பார்க்கும் வசதியும் ஒன்கார்டு செயலில் உள்ளது, அதைப் பதிவிறக்கமும் செய்யலாம்.

**ii)** செலுத்த வேண்டிய குறைந்தபட்சத் தொகை

உங்கள் அறிக்கையைப் பெறும்போது, உங்கள் அறிக்கையின்படி மொத்த தவணைத் தொகையை (TAD) செலுத்துவதை அல்லது குறைந்தபட்ச தவணைத் தொகையை (MAD) செலுத்துவதை நீங்கள் தேர்வு செய்யலாம். மீதமுள்ள நிலுவைத் தொகையை அடுத்தடுத்த மாதங்களுக்கு எடுத்துச் செல்லலாம். இந்த குறைந்தபட்ச நிலுவைத் தொகை பின்வருமாறு இருக்கும்:

i) நிலுவைத் தொகையில் 5% அல்லது Rs.100/- (எது அதிகமோ அது) உடன்

ii) செலுத்தப்படாத முந்தைய குறைந்தபட்ச தவணைத் தொகைகள்

(ஏதேனும் இருந்தால்); உடன்

iii) கடன் வரம்பை மீறும் ஏதேனும் தொகை உடன்

iv) செலுத்த வேண்டிய தவணைகளின் முழுத் தொகை (EMI) (பொருந்தினால்/பொருந்துகின்றவாறு)

மொத்த தவணைத் தொகையையும் அல்லது குறைந்தபட்ச தவணைத் தொகைக்கும் மொத்த தவணைத் தொகைக்கும் இடையே உள்ள ஒரு தொகையையும் நீங்கள் செலுத்தலாம். தாமத பேமெண்ட் கட்டணங்களைத் தவிர்க்க, தவணை பேமெண்ட் தேதிக்கு முன் பணத்தைச் செலுத்த வேண்டும்.

நீங்கள் பணம் செலுத்தும்போது, அது பின்வரும் வரிசையில் சரிசெய்யப்படும்.
வட்டி மற்றும் வரிகளுடன் பில் செய்யப்பட்ட ரொக்க அட்வான்ஸ் கட்டணம்

கட்டணம், வட்டி மற்றும் வரிகளுடன் (பொருந்துகின்றவாறு) பில் செய்யப்பட்ட வாங்குதல்கள்

வட்டி மற்றும் வரிகளுடன் பில் செய்யப்படாத ரொக்க முன்பணக் கட்டணம்

கட்டணம், வட்டி மற்றும் வரிகளுடன் (பொருந்துகின்றவாறு) பில் செய்யப்படாத வாங்குதல்கள்.

இவற்றிற்குள், மேலும் பின்வருமாறு பேமெண்ட் சரிசெய்யப்படுகிறது:

வரிகள்

கட்டணம்

வட்டி

வாங்குதல்கள்.

செலுத்த வேண்டிய மொத்தத் தொகை Rs.100/- -க்குக் குறைவாக இருந்தால், குறைந்தபட்ச தவணைத் தொகை மொத்த நிலுவைத் தொகைக்கு சமமாக, அதாவது Rs.100/- ஆக இருக்கும்.

| புத்திசாலியாக இருங்கள். கடன் வலையில் விழாமல் தவிருங்கள் | |
|---|---|
| ஒவ்வொரு மாதமும் மொத்த நிலுவைத் தொகையை அல்லது குறைந்தபட்ச தவணைத் தொகையை விட அதிகமாக செலுத்துதல் | ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச தவணைத் தொகையை மட்டுமே செலுத்துதல் |
| • நிலுவைகளை விரைவாக முடியுங்கள்<br>• குறைந்த வட்டியைச் செலுத்துங்கள்<br>• உங்கள் செலவு வரம்பை விடுவியுங்கள்<br>• உங்கள் கிரெடிட் ஸ்கோரை அதிகரியுங்கள்... | மொத்த தவணைத் தொகையையும் செலுத்தி முடிக்க சுமார் 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் ஆகலாம். |

**iii)** ஃபண்டுகள் சாபே க்குகள்/கட்டணகளை த் திருப்பி வழகுதல்

கூடுதல் கட்டணங்கள் விதிக்கப்படுவதைத் தவிர்க்க, SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு அறிக்கையில் பில் செய்யப்பட்ட பரிவர்த்தனைகளுக்கு நீங்கள் பணம் செலுத்த வேண்டும். SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு அறிக்கையில் காண்பிக்கப்படாத எந்தவொரு ரீஃபண்டுகள், சார்ஜ்பேக்குகள் அல்லது கட்டணங்களைத்திருப்பிச் செலுத்துதல்கள் ஆகியவற்றை பணம் செலுத்தும் போது நீங்கள் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையிலிருந்து (TAD) நீங்களாகவே சரிசெய்து கொள்ளவோ, குறைத்துக் கொள்ளவோ கூடாது.

ரீஃபண்டுகள்/ சார்ஜ்பேக்குகள்/ கட்டணங்களைத் திருப்பி வழங்குதல்கள் ஏதேனும் இருந்தால், அவை உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு கணக்கில் காண்பிக்கப்படும். அத்தகைய ரீஃபண்டுகள்/சார்ஜ்பேக்/கட்டணங்களைத் திருப்பிப் பெறும்போது, உங்கள் அடுத்த SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு அறிக்கையில் உங்கள் தவணைகளுக்காக அவை சரி செய்து கொள்ளப்படும்.

**iv)** பணம் செலுத்தும் முறை

பின்வரும் முறைகள் மூலம் ஒன்கார்டு செயலியில் இருந்தே நீங்கள் நிலுவைத் தவணைத் தொகைகளைச் செலுத்தலாம்:

a) டெபிட் கார்டு b) நெட்பேங்கிங் c) UPI

ஒன்கார்டு செயலியில் வழங்கப்பட்டுள்ள தனிப்பட்ட SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு வங்கிக் கணக்கு எண்ணுக்கு IMPS அல்லது NEFT மூலமாகவும் நீங்கள் பணம் செலுத்தலாம்.

**(v)** பில்லிங் சர்ச்சைகளுக்கான தீர்வு

ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால், அறிக்கைத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்கவில்லை என்றால், அறிக்கையின் அனைத்து உள்ளடக்கங்களும் சரியானது மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கருதப்படும். பில்லிங் சர்ச்சைகள்/முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில், நாங்கள் அந்தப் பரிவர்த்தனைகளுக்கான பொறுப்பை விசாரித்து, உறுதிப்படுத்துவோம். சில குறிப்பிட்ட சர்ச்சைகளுக்கு, விசாரணை காலகட்டத்தின் போது நாங்கள் ஒரு தற்காலிக கிரெடிட்டை வழங்கலாம். இது விசாரணையின் முடிவுகளுக்கு உட்பட்டு, பொருந்தக்கூடிய கட்டணங்களுடன் மாற்றியமைக்கப்படலாம். கட்டணம் மற்றும் கட்டண விதிப்புகள் அல்லது வட்டி தொடர்பான எந்தவொரு சர்ச்சையிலும் விதிக்கப்பட்ட GST திருப்பி வழங்கப்படாது.

**(vi)** கார்டு வழங்குநர் தொடர்பு விவரங்கள்

உங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால், நீங்கள் செய்ய வேண்டியவை:
ஒன் கோ-பிராண்டட் செயலியில் உள்ள சுயவிவரப் பிரிவில் இருந்து “உதவி

தேவையா?” என்பதைத் தேர்ந்தெடுக்கவும்

உங்கள் கேள்வி அல்லது குறையை மின்னஞ்சல் செய்யவும்

1800-210-9111 என்ற எங்கள் உதவி மைய எண்ணில் எங்களை அழைக்கவும்

எங்களுக்கு எழுதவும்: FPL டெக்னாலஜிஸ் பிரைவேட். லிமிடெட், மேற்கு பே, சர்வே எண். 278, ஹிஸ்ஸா எண். 4/3 பல்லோடு பண்ணை, கட்டம் II, பேனர் தாலுகா, ஹவேலி பனர் காவ்ன், புனே நகரம் புனே - 411045, மகாராஷ்டிரா - இந்தியா

**(vii)** குறைதீர்த்தல் மேல்முறையீடு

வழக்கமான முறைகளின் மூலம் கிடைக்கும் பதிலில் உங்களுக்குத் திருப்தி இல்லை என்றால், grievances@fplabs.tech என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

இதற்கு மேல் ஏதேனும் மேல்முறையீட்டிற்கு, வங்கியை https://www.southindianbank.com/content/grievance-registration/287 இல் தொடர்புகொள்ளலாம் அல்லது nodalofficer@fplabs.tech என்ற முகவரியில் நோடல் அதிகாரியைத் தொடர்புகொள்ளலாம்.

மேற்கண்ட முறைகளில் அணுகிய பிறகும் 30 நாட்களுக்கு மேல் சிக்கல் தீர்க்கப்படவில்லை என்றாலோ அல்லது பதில் திருப்திகரமாக இல்லை என்றாலோ, தனி மதிப்பாய்வுக்காக நீங்கள் வங்கிக் குறைதீர்ப்பாளருக்கு எழுதலாம். இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) இணையதளமான https://www.rbi.org.in/ - இல் வங்கிக் குறைதீர்ப்பாளர் திட்டம் குறித்த விவரங்கள் கிடைக்கின்றன.

**viii)** கிரெ டிட் இருப்பு/ அதிகப்படியான தொகையின் ஃபண்டு
ரீஃபண்டு / தோல்வியுற்ற / மாற்றியமைக்கப்பட்ட பரிவர்த்தனைகள் மூலம் ஏற்படும்
ஏதேனும் அதிகப்படியான கிரெடிட், ஒரு கட்-ஆஃப்பிற்கு (கிரெடிட் வரம்பில் 1% அல்லது Rs.5000/- எது குறைவாக இருக்கிறதோ, அது) பிறகு ஒன்கார்டு செயலியில் கார்டுதாரர் சேர்த்துள்ள கணக்கிற்கு மீண்டும் மாற்றப்படும். அடுத்தடுத்த சுழற்சிகளில் வாங்குதல்களுக்கு எதிரான அதிகப்படியான கிரெடிட்டை சரிசெய்ய, கார்டுதாரர் வாடிக்கையாளர் அனுபவக் குழுவைத் தொடர்பு கொள்ள வேண்டும். சந்தேகத்திற்கிடமான ரீஃபண்டு/ பரிவர்த்தனைகளைத் திரும்பப் பெறுதல் மீது உரிய கவனம் செலுத்தப்பட்டு, சரிபார்ப்புச் செயலாக்கம் மேற்கொள்ளப்படும்.
இந்த கிரெடிட் இருப்பு/ அதிகப்படியான தொகை ரீஃபண்டு செய்யப்பட வேண்டும் என்றால், பின்வரும் நடைமுறையை நீங்கள் பின்பற்ற வேண்டும்:

வங்கிக் கணக்கையும், IFSC குறியீட்டையும் உள்ளிடுவதன் மூலம், ஒன்கார்டு செயலியில் உள்ள சுயவிவரப் பிரிவில் வங்கிக் கணக்கை கார்டுதாரர் சேர்க்க வேண்டும்.

எந்தவொரு கூடுதல் ரீஃபண்டு / திரும்பப்பெறுதல் தொகையானது சேர்க்கப்பட்ட அந்த வங்கிக் கணக்கிற்கு மட்டுமே அனுப்பப்படும். SIB ஒன் கோ-பிராண்டட்

கிரெடிட் கார்டில் வாங்கியவற்றுக்காக அந்த அதிகப்படியான ரீஃபண்டு/திரும்பப் பெறும் தொகையைச் சரிசெய்ய கார்டுதாரர் விரும்பினால், வாடிக்கையாளர் அனுபவக் குழுவைக் கார்டுதாரர் தொடர்பு கொள்ள வேண்டும்.

கூடுதல் ரீபேமெண்ட்டின் காரணமாக கிரெடிட் இருப்பு/ அதிகப்படியான தொகை இருக்கிறது என்றால், அது 7-10 வேலை நாட்களுக்குள் கார்டுதாரர் ரீபேமெண்ட் செய்த கணக்கிற்கு மாற்றப்படும்.

SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு கணக்கு ரத்து செய்யப்பட்டால், மேற்கண்ட உட்பிரிவு a) -இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைக்கேற்ப, கிரெடிட் இருப்பு/ அதிகப்படியான தொகையானது கார்டுதாரரின் சேமிப்பு வங்கிக் கணக்கில் ரீஃபண்டு செய்யப்படும்.

கார்டுதாரரின் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு கணக்கில் இருக்கும் கிரெடிட் பேலன்ஸ்/ அதிகப்படியான தொகைக்கு வட்டி எதுவும் வழங்கப்பட மாட்டாது.

அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகளை நிறைவு செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட கடன் வரம்பை செயற்கையாக அதிகரிப்பதற்கு, கார்டுதாரர்கள் தங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு கணக்கில் அதிகப்படியான பணம் செலுத்துவதற்கு அனுமதி இல்லை. கடன் வரம்பை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படும் பட்சத்தில், தனியாக அதற்கான கோரிக்கையை வைக்கலாம்.

**D)** தவறுதல் நிலை மற்றும் சூழ்நிலைகள்

**(i)** கார்டுதாரரை தவறுதல் நிலையில் உள்ளவை எனத் தெரிவிப்பதற்கான அறிவிப்புக் காலம் உள்ளிட்ட நடை முறை

பேமெண்ட் தவணைத் தேதிக்கு 3 நாட்களுக்குப் பிறகு, குறைந்தபட்ச தவணைத் தொகையையாவது நீங்கள் செலுத்தவில்லை என்றால், அந்தக் கார்டு கடனைச் செலுத்தத் தவறியதாக வங்கி மூலம் இந்திய ரிசர்வ் வங்கியால் (RBI) அங்கீகரிக்கப்பட்ட கடன் தகவல் நிறுவனங்களுக்கு (CIC-கள்) தெரிவிக்கப்படும். குறைந்தபட்ச

தவணைத் தொகையைச் செலுத்தாமல் இருப்பது கிரெடிட் கார்டு சேவைகள் நிறுத்தப்படுவதற்கும் வழிவகுக்கும்.

**(ii)** தவணைத் தொகையை செட்டில் செய்த பிறகு நிலை அறிக்கை யை திரும்பப் பெறுவதற்கான நடைமுறை மற்றும் தவறுதல் நிலை அறிக்கை திரும்பப் பெறப்படும் காலம்

ஒருமுறை கடன் தகவல் நிறுவனங்களுக்கு (CIC) தெரிவிக்கப்பட்ட பிறகு அந்த அறிக்கை திரும்பப் பெறப்படாது. இருப்பினும், தவணைத் தொகைகளை

நீங்கள் செலுத்திவிட்டால், அந்தத் தகவலை அடுத்த மாதத்தில் கடன் தகவல் நிறுவனங்களுடன் (CIC-கள்) பகிர்ந்து கொள்வதற்காக வங்கிக்கு அது வழங்கப்படும்.

**(iii)** தவறுதல் நிலை ஏற்பட்டால் மீட்பு நடை முறை

தவறுதல் நிலை ஏற்படும் பட்சத்தில், ஏதேனும் நிலுவையில் உள்ள நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்காக, கடிதம், தொலைபேசி, மின்னஞ்சல், SMS மற்றும் வாட்ஸ்ஆப் போன்ற முறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் மூலம் உங்களுக்கு நினைவூட்டல்கள் அனுப்பப்படும். வழக்கமான முறைகளின் மூலம் உங்களிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை என்றால், நிலுவைத் தொகையை நினைவூட்டவும், பின்தொடரவும் மற்றும் வசூலிக்கவும் மூன்றாம் தரப்பினர் ஈடுபடுத்தப்படலாம். உங்கள் மனைவி / பெற்றோர் / பிற வயது வந்த நேரடிக் குடும்ப உறுப்பினர் / செயலாளர் / கணக்காளர் அல்லது மற்ற சக பணியாளர் ஆகியோருக்கு உங்கள் குடியிருப்பு / அலுவலகம் / தொலைபேசி மூலம் செய்தி அனுப்பப்படலாம். அவ்வாறு நியமிக்கப்படும் மூன்றாம் தரப்பினர் கடனை வசூலிப்பது தொடர்பான நடத்தை விதிகளை முழுமையாகப் பின்பற்றுவார்கள்.

**(iv)** கார்டுதாரருக்கு எதிர்பாராத மரணம் ஏற்படும் பட்சத்தில் நிலுவைத் தொகையை வசூலித்தல்

முதன்மை கார்டுதாரருக்கு எதிர்பாராத மரணம் ஏற்படும் பட்சத்தில், மொத்த நிலுவைத் தொகையையும் (பில்லிங் செய்யப்படாத பரிவர்த்தனைகள் உட்பட) உடனடியாக வங்கிக்குச் செலுத்த வேண்டும். வங்கி கார்டுதாரரின் சட்டப்பூர்வ வாரிசுகளை பின்தொடர்ந்து, நிலுவைத் தொகையைப் பற்றி அவர்களுக்குத் தெரிவித்து, அந்த நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு கேட்கப்படும்.

**(v)** கார்டுதாரருக்கு இயற்கை மரணம் ஏற்படும் பட்சத்தில் வசூலித்தல்

கார்டுதாரருக்கு இயற்கையான மரணம்/ நிரந்தர செயலிழப்பு ஏற்படும் பட்சத்தில் நிலுவைத் தொகையை வசூலித்தல்: மொத்த நிலுவைத் தொகையையும் (பில்லிங் செய்யப்படாத பரிவர்த்தனைகள் உட்பட) உடனடியாக வங்கிக்குச் செலுத்த வேண்டும். கார்டுதாரரின் சொத்திலிருந்து மொத்த நிலுவைத் தொகையையும் மீட்டெடுக்க வங்கிக்கு உரிமை உண்டு. கார்டுதாரரின் சட்டப்பூர்வ வாரிசுகள் /எந்தவொரு நிதி நிறுவனத்திலும் கார்டுதாரரின் பெயரில் பராமரிக்கப்படும் பணம் / வைப்புத்தொகை / கணக்குகள் ஆகியவற்றிலிருந்து மொத்த நிலுவைத் தொகையை மீட்டெடுக்கவும் வங்கிக்கு உரிமை உண்டு.

**(vi)** பற்றுமை மற்றும் செட் ஆஃப்/ நெட் ஆஃப் ஆகியவற்றுக்கான உரிமை

SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டைப் பயன்படுத்துவதன் விளைவாக எழும் எந்தவித நிலுவையில் உள்ள அனைத்து நிலுவைத்

தொகைகளுக்காகவும் உங்கள் கணக்குகளில் உள்ள எந்த வகையான வைப்புத்தொகை (நிலையான வைப்புத்தொகை உட்பட/ இருப்புகள் மற்றும் ஏதேனும் பணம், பத்திரங்கள், பிணையங்கள் மற்றும் பிற சொத்துக்கள், ஆவணங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் சவுத் இந்தியன் வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள ஆவணங்கள், பத்திரங்கள் மற்றும் உடைமைகள், அவற்றின் அறங்காவலர்கள் அல்லது முகவர்கள் (பத்திரம் மூலமாகவோ அல்லது ஏதேனும் ஒப்பந்தத்தின்படியோ அல்லது எந்தத் திறனிலும் நீங்கள் செய்துகொள்ளும் வகையில்) ஆகியவற்றின் மீது வங்கிக்குப் பற்றுரிமை மற்றும் செட்-ஆஃப்/ நெட்-ஆஃப் உரிமை உண்டு.

**E)** கார்டு உறுப்பின தகுதியை நீக்குதல்/ திரும்பப் பெ றுதல்

**i)** கார்டுதாரர் காடை ஒப்படை ப்பதற்கான நடைமுறையை உரிய அறிவிப்பு -

a) வாடிக்கையாளர் சேவைக் குழுவை அழைப்பதன் மூலமோ அல்லது அவர்களுக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலமோ உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு கணக்கை எந்த நேரத்திலும் நீங்கள் மூடலாம். உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டுடன் இணைக்கப்பட்டுள்ள மொத்த கார்டு நிலுவைத் தொகைகள் மற்றும் கடன்கள் / EMI வசதிகள் (பொருந்தினால் மற்றும்/அல்லது பயன்படுத்தப்பட்டால்) ஆகியவற்றை நீங்கள் உடனடியாகத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

b) கார்டு மூடப்பட்ட பிறகு பெறப்படும் ஏதேனும் ரீஃபண்டு/திரும்பப் பெறுதல் பற்றி உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, உரிமையைச் சரிபார்த்த பிறகு வாடிக்கையாளர் சேவையில் தெரிவிக்கப்பட்ட கணக்கு எண்ணுக்கு எலக்ட்ரானிக் முறையில் ரீஃபண்டு செய்யப்படும்.

c) விர்ச்சுவல் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு செயல்படுத்தப்பட்டதும், அச்சிடப்பட்ட கார்டு உங்களுக்கு அனுப்பப்படும். விர்ச்சுவல் கார்டை செயல்படுத்திய 6 மாதங்களுக்குள் கார்டு உறுப்பினர் தகுதியை ரத்து செய்ய நீங்கள் முடிவெடுத்தால், Rs.3,000/- கட்டணம் விதிக்கப்படும். இது ஒட்டுமொத்த நிலுவைத் தொகையுடன் சேர்க்கப்படும். அனைத்து நிலுவைத் தொகைகளும் செலுத்தப்பட்டு, வங்கியின் அமைப்பில் பதிவு செய்யப்பட்டவுடன் கார்டு கணக்கு மூடப்படும்.

d) கார்டு உறுப்பினராலோ அல்லது வேறுவிதமாகவோ, எந்தக் காரணத்திற்காகவும் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு உறுப்பினர் தகுதி நிறுத்தப்பட்டால்/ திரும்பப் பெறப்பட்டால், SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட அனைத்துக் கட்டணங்களுக்கும் கார்டு உறுப்பினரே பொறுப்பாவார்.

e) உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு கணக்கு மூடப்பட்டவுடன், SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டின் சலுகைகள் (சேர்ந்துள்ள அனைத்து

நன்மைகள் மற்றும் சேவைகள், ரெடீம் செய்யப்படாத ரிவார்டு புள்ளிகள் போன்றவை உட்பட) ரத்து செய்யப்படும் என்பதை நீங்கள் குறிப்பாக ஒப்புக் கொள்கிறரீர்கள். அதை மீட்டெடுப்பது தானாக அல்லது பணியாளர் மூலம் நடைபெறாது. வங்கியின் தனித்த விருப்பத்தின் பேரில் மட்டுமே அது நடைபெறும்.

f) தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக,ஹாலோகிராம், காந்தப் பட்டை மற்றும் சிப் ஆகியவை நிரந்தரமாக அழிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் SIB ஒன்

கோ-பிராண்டட் கிரெடிட் கார்டை அழித்து விடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

g) SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு கணக்கு தொடர்பாக செலுத்த வேண்டிய மற்றும் நிலுவையில் உள்ள அனைத்துத் தொகைகளும் செலுத்தப்பட்டு, கணினியில் பதிவு செய்யப்பட்டவுடன் மட்டுமே உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு கணக்கு மூடப்படும்.

h) நிலுவைத் தொகைகளைச் செலுத்தி முடிப்பதற்கு உட்பட்டு, கார்டை மூடுவதற்கு நீங்கள் 1800-210-9111 என்ற எண்ணில் தொலைபேசி மூலம் வாடிக்கையாளர் சேவையை அழைக்கலாம் அல்லது ஒன்கார்டு செயலியில் ஒரு டிக்கெட்டை எழுப்பலாம்.

**ii)** காடு உறுப்பின தகுதியை ரத்து செ ய்வதற்கான நடை முறை

வணிகம் அல்லது பாதுகாப்புக் காரணங்களுக்காக அவசியம் என்று நாங்கள் கருதினால், எந்த நேரத்திலும் முன் அறிவிப்பு எதுவும் இல்லாமல் உங்களுடைய SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட்
கார்டுக்கான உங்கள் அணுகலை ரத்து செய்யலாம் அல்லது திரும்பப் பெறலாம், அவற்றில் பின்வருவன அடங்கும், ஆனால் இவை மட்டுமே அல்ல:

தாமதமான பேமெண்ட் அல்லது பேமெண்ட் செய்யாமல் இருப்பது, கிரெடிட் கார்டை முறையின்றிப் பயன்படுத்துவது (RBI மற்றும் அந்நியச் செலாவணி விதிகளை மீறும் வகையில்).

கார்டு விண்ணப்பத்துடன் தவறாக வழிநடத்தும் அல்லது தவறான தகவல் / ஆவணங்களை வழங்குவது

உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC)/ பணமோசடி எதிர்ப்பு (AML)/ பயங்கரவாதத்திற்கு நிதியுதவி வழங்குவதற்கு எதிராகப் போராடுதல்(CFT) வழிகாட்டுதல்களின் கீழ் தேவையான தகவல் அல்லது ஆவணங்களை வழங்கத் தவறுவது

ஏதேனும் அதிகார அமைப்பு, நீதிமன்றம் அல்லது தொழில்முறை அமைப்பு அல்லது சங்கத்தின் மூலம் ஏதேனும் சிவில் வழக்கு அல்லது கிரிமினல் குற்றத்தில்

/ நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

நிலவுகின்ற நிபந்தனைகள்/எதிர்பாராத சூழ்நிலைகள் காரணமாக கடன் கொள்கையில் மாற்றங்கள் செய்யப்படுவது. கார்டு கணக்கு மூடப்பட்ட பிறகும் கூட, நிலுவையில் உள்ள உண்மையான தொகையைத் தெரிவிக்கும் உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு அறிக்கைகளை நீங்கள் தொடர்ந்து பெறலாம்.

ஒரு வருடத்திற்கு மேலாக உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தாமல் இருந்தால், 30 நாட்களுக்குள் கணக்கு செயலற்ற நிலைக்குச் சென்று விடும் என்பது பற்றி உங்களுக்கு அறிவிப்போம். கார்டுதாரர் பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி கணக்கு மூடப்படுவதைத் தடுக்கலாம் –

ஒரு டெபிட் பரிவர்த்தனையை (ஆன்லைன் அல்லது ஆஃப்லைன்) மேற்கொள்ளுதல்

செயலியில் ஒப்புதலை வழங்குதல்

செயலியின் மூலம் கார்டு PIN எண்ணை அமைத்தல் அல்லது மாற்றுதல்

செயலியின் மூலம் பரிவர்த்தனைக் கட்டுப்பாடுகளை அமைத்தல் அல்லது மாற்றுதல்

செயலியின் மூலம் பரிவர்த்தனை வரம்புகளை அமைத்தல் அல்லது மாற்றுதல்

செயலியின் மூலம் ஓவர்லிமிட் கட்டுப்பாட்டை மாற்றுதல்
செயலியின் மூலம் ஸ்வைப் 2 பே கட்டுப்பாட்டை மாற்றுதல்

கடன் வரம்பு அதிகரிப்பைத் தேர்வு செய்தல் (அந்த வசதி வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டால்)

**F)** கார்டு தொலைந்து போவது**/** திருடப்படுவது**/** தவறாகப் பயன்படுத்தப்படுவது

**i)** கார்டு தொலைந்து போவது**/**திருடப்படுவது**/**தவறாகப் பயன்படுத்தப்படும் சூழ்நிலையில் பின்பற்ற வேண்டிய நடைமுறை

உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு தொலைந்து விட்டாலோ, திருடப்பட்டாலோ, தவறான இடத்தில் வைத்து விட்டாலோ அல்லது கிரெடிட் கார்டு PIN எண் வேறு நபருக்குத் தெரிந்து விட்டாலோ, அதை உடனடியாக ஒன்கார்டு செயலி மூலமாகவோ அல்லது 1800-210-9111 என்ற எண்ணில் தொலைபேசி மூலமாகவோ அல்லது help@getonecard இல் மின்னஞ்சல் மூலமாகவோ புகாரளிக்கவும்.

உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டை தவறான இடத்தில் வைத்து விட்டால், ஒன்கார்டு செயலியின் மூலம் நீங்கள் அந்தக் கார்டை தற்காலிகமாகப் பூட்டி வைக்கலாம்.

உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு தொலைந்து விட்டால் அல்லது திருடப்பட்டால், ஒன்கார்டு செயலியின் மூலம் நீங்கள் அந்த SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டை முடக்கலாம். ஒரு புதிய கார்டு உங்களுக்கு அனுப்பப்படும். ஒன்கார்டு செயலியின் மூலம் கார்டு PIN எண்ணை மீட்டமைக்கவும் செய்யலாம்.

ஒன்கார்டு செயலியை வைத்திருக்கும் மொபைல் தொலைந்து விட்டால் அல்லது திருடப்பட்டால், உடனடியாக 1800-210-9111 என்ற எண்ணில் எங்களுக்குத் தெரிவிக்கவும். SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு அல்லது ஃபோன் திருடப்பட்டதை காவல்துறையிடம் புகார் தெரிவித்து முதல் தகவல் அறிக்கையை (FIR) பதிவு செய்து, கேட்கும் போது அதன் நகலை எங்களிடம் வழங்கவும்.

உங்கள் பதிவுசெய்யப்பட்ட மொபைல் எண் அல்லது மின்னஞ்சல் முகவரியை மாற்றினால், help@getonecard.app என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் எங்களுக்குத் தெரிவிக்கலாம்.

**ii)** பின்வரும் சூழ்நிலையில் கார்டுதாரன் பொறுப்பு

(i) மேற்கண்டவை, அவ்வப்போது புதுப்பிக்கப்படும் 'வாடிக்கையாளர் பாதுகாப்பு - அங்கீகரிக்கப்படாத எலக்ட்ரானிக் வங்கிப் பரிவர்த்தனைகளில் வாடிக்கையாளர்களின் பொறுப்பைக் கட்டுப்படுத்துதல்' பற்றிய ஜூலை 6, 2017 தேதியிடப்பட்ட RBI சுற்றறிக்கை DBR.No.Leg.BC.78/09.07.005/2017-18

விதிமுறைகளின்படியானவை ஆகும்.

A. பின்வரும் சூழ்நிலைகளில் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் ஏற்படுவதற்கு நீங்கள் எந்த வகையிலும் பொறுப்பாகமாட்டீர்கள்

எங்கள் தரப்பில் பங்கேற்கும் மோசடி/ அலட்சியம்/ குறைபாடு.

மூன்றாம் தரப்பு மீறல் வகையில் கணினியில் வேறு இடத்தில் குறைபாடு இருந்து, அந்த அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை தொடர்பாக எங்களிடமிருந்து தகவலைப் பெற்ற 3 வேலை நாட்களுக்குள் நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்கும் பட்சத்தில்

B. பின்வரும் சூழ்நிலைகளில் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் காரணமாக ஏற்படும் இழப்புக்கு நீங்கள் பொறுப்பாவரீர்கள்:

பேமெண்ட் அங்கீகார விவரங்களை நீங்கள் பகிர்ந்து கொள்வது போன்ற உங்களின் அலட்சியத்தால் இழப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில், அந்த அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை பற்றி எங்களிடம் தெரிவிக்கும் வரை ஏற்படும் முழு இழப்பையும் நீங்கள் ஏற்க வேண்டும். அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனையைத் தெரிவித்த பிறகு ஏற்படும் எந்த இழப்பையும் நாங்கள் ஏற்றுக் கொள்வோம்.

அங்கீகரிக்கப்படாத எலக்ட்ரானிக் வங்கிப் பரிவர்த்தனைக்கான பொறுப்பு எங்களிடமோ அல்லது உங்களிடமோ இல்லாமல், கணினியில் வேறொரு இடத்தில் இருக்கும் சந்தர்ப்பங்களில் மற்றும் அந்தப் பரிவர்த்தனையை எங்களிடம் தெரிவிப்பதில் உங்கள் தரப்பில் தாமதம் ஏற்பட்டால் (எங்களிடமிருந்து தகவலைப் பெற்ற 4-7 வேலை நாட்களுக்குள்), உங்கள் பரிவர்த்தனை ஒன்றுக்கான பொறுப்பானது அந்தப் பரிவர்த்தனை மதிப்பு அல்லது கீழே உள்ள அட்டவணையில் (RBI விதிமுறைகளுக்கேற்ப) குறிப்பிடப்பட்டுள்ள தொகை, இவற்றில் எது குறைவோ அதுவாக இருக்கும்.

மேலும், எங்களுக்கு நீங்கள் தெரிவிப்பதற்கு 7 நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்பட்டால், வங்கியின் இயக்குநர் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைக்கேற்ப வாடிக்கையாளரின் பொறுப்பு தீர்மானிக்கப்படும்.

| வாடிக்கையாளரின் அதிகபட்ச பொறுப்பு | |
|---|---|
| தகவலைப் பெற்ற தேதியிலிருந்து மோசடியான பரிவர்த்தனைகளைத் தெரிவிக்கும் நேரம் | வாடிக்கையாளர் பொறுப்பு |
| 3 வேலை நாட்களுக்குள் | பூஜ்ஜியம் |
| 4-7 வேலை நாட்களுக்குள் | கிரெடிட் கார்டு வரம்பு <= Rs.500000/- ; அதிகபட்சப் பொறுப்பு <= Rs. 10000/-<br>கிரெடிட் கார்டு வரம்பு > Rs.500000/- ; அதிகபட்சப் பொறுப்பு <= Rs. 25000/- |
| 7 வேலை நாட்களுக்கு மேல் | வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைக்கேற்ப |

உங்கள் ஒன்கார்டு செயலியின் ***PIN*** எண்ணையும்***,*** கிரெடிட் கார்டு ***PIN*** எண்ணையும் யாருடனும் ஒருபோதும் பகிர வேண்டாம்!

**G)** வெளிப்படுத்தல்கள்

தற்போதைய இருப்பு, SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டுடன் இணைக்கப்பட்டுள்ள கடன்கள் / EMI வசதிகள் (பொருந்தினால் மற்றும்/அல்லது பயன்படுத்தினால்), SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டில்/ கடனில் நிலுவையில் உள்ள நிலுவைத் தொகை, பேமெண்ட் வரலாறு உள்ளிட்ட, ஆனால் இவை மட்டுமே அல்லாத கடன் விவரங்களையும் கடன் தகவல் நிறுவனங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 2005 இன் படி, RBI அங்கீகாரம் பெற்ற கடன் தகவல் நிறுவனங்களுடன் (CICs) வங்கி பகிர்ந்து கொள்ளும்.

உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு தொடர்பான சில நடவடிக்கைகள், வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அவுட்சோர்ஸ் சேவை வழங்குநரான FPL டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் ("FPL")க்கு வங்கியால்

அவுட்சோர்ஸ் செய்யப்படுகின்றன. வங்கியால் அங்கீகரிக்கப்பட்டவாறு SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டை வங்கிக்காக FPL நிர்வகிக்கிறது.

இந்த விதிமுறைகளில் "நாங்கள்" என்பதற்கான குறிப்புகள் அனைத்தும் வங்கி, ஒன்கன்ஸ்யூமர் மற்றும்/ அல்லது FPL டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் போன்ற வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநரைக் குறிக்கும்.

வங்கிகள் அல்லது NBFC-கள் நிதிச் சேவைகளை அவுட்சோர்சிங் செய்வது குறித்து RBI வழங்கிய வழிகாட்டுதல்கள் உட்பட, அனைத்து
ஒழுங்குமுறை விதிகள், அறிவுறுத்தல்கள் மற்றும்
வழிகாட்டுதல்களுக்கு இணங்க வேண்டிய அனைத்துப் பொறுப்புகளும் வங்கிக்கு உள்ளது. வங்கிகள் அல்லது NBFC-கள் நிதிச் சேவைகளை அவுட்சோர்சிங் செய்வது குறித்து RBI வழங்கிய வழிகாட்டுதலுக்கு முரணாக எந்தச் சேவைகளையும் நாங்கள் வழங்க மாட்டோம்.

சட்டப்பூர்வ அதிகாரிகளுக்கு, தேவைக்கேற்ப SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு கணக்கின் விவரங்களை வங்கி வழங்கும்.

பரிவர்த்தனை விழிப்பூட்டல்களைப் பெறுவதால் பரிவர்த்தனை முடிவடைந்தது என்பது உறுதிப்படுத்தப்பட்டதாகக் கருத முடியாது.

பிற தயாரிப்புகளுக்காக எங்களிடமிருந்து சந்தைப்படுத்தல் அழைப்புகள்/ மின்னஞ்சல்களைப் பெற விரும்பவில்லை என்றால், தொந்தரவு செய்ய வேண்டாம் என்ற சேவையில் நீங்கள் பதிவு செய்யலாம், அத்தகைய மின்னஞ்சல்களில் வழங்கப்படும் இணைப்பைக் கிளிக் செய்வதன் மூலம் நீங்கள் விளம்பர மின்னஞ்சல்களிலிருந்து விலகவும் செய்யலாம்.

SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டின் பரிவர்த்தனைகள் மற்றும் முக்கிய அம்சங்கள் பற்றிய தகவல்களை நீங்கள் தொடர்ந்து பெறுவீர்கள். இந்த MITC ஆவணம், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ஆகியவற்றின் நகல் www.getonecard.app -இல் எப்போதும் கிடைக்கும்.

கோ-பிராண்டட் கிரெடிட் கார்டை வழங்குவதற்காக ஒன்கன்ஸ்யூமர் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கும் வங்கிக்கும் இடையே செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டில், கோ-பிராண்டு கிரெடிட் கார்டு தொடர்பான வருவாயைப் பகிர்ந்து கொள்வது அடங்கியிருக்கலாம்.

**H)** குறைகளைத் தீர்த்தல் மற்றும் இழப்பீடு வழங்குதல் கட்டமை ப்பு

**i)** குறைகளைத் தீர்த்தல் மற்றும் மேல்முறையீட்டுச் செயல்முறை மற்றும் குறைகளைத் தீப்பதற்கான காலக்கெடு

a) குறைகளைத் தீர்ப்பதற்கான காலக்கெடு

grievances@fplabs.tech என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொண்ட பின்னரும் உங்கள் குறை திருப்திகரமாகத் தீர்க்கப்படவில்லை என்றால், நீங்கள்

வங்கியைத் தொடர்புகொள்ளலாம்

மேற்கண்ட முறைகளில் அணுகிய பிறகும் 30 நாட்களுக்கு மேல் சிக்கல் தீர்க்கப்படவில்லை என்றாலோ அல்லது பதில் திருப்திகரமாக இல்லை என்றாலோ, தனித்த மதிப்பாய்வுக்காக நீங்கள் வங்கி குறைதீர்ப்பாளருக்கு எழுதலாம். இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) இணையதளத்தில் வங்கிக் குறைதீர்ப்பாளர் திட்டம் குறித்த விவரங்கள் கிடைக்கின்றன.

**ii)** தீப்பதில் தாமதம் ஏற்படும் பட்சத்தில் கீழே உள்ள இழப்பீடு வழங்கும்

| SR.A | நிகழ்வுக்கான விளக்கம் | வழங்க வேண்டிய இழப்பீடு |
|---|---|---|
| 1 | செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள் எதுவும் இல்லை என்பதன் அடிப்படையில் கார்டு மூடுதல் கோரிக்கை | T+7 வேலை நாட்களுக்கு மேல் தாமதமாகும் நாள் ஒன்றுக்கு Rs.500/- |
| 2 | பாயிண்ட் ஆஃப் சேல் / CNP பரிவர்த்தனை கணக்கிலிருந்து டெபிட் செய்யப்பட்டது ஆனால் வணிகரால் செட்டில் செய்யப்படவில்லை | உள்நாட்டிற்கு T+5 நாட்களுக்கு மேலும், சர்வதேசத்திற்கு T+7 நாட்களுக்கு மேலும் தாமதமாகும் நாள் ஒன்றுக்கு Rs.100/- |

கட்டமைப்பு பின்பற்றப்படும்

**iii)** கார்டு வழங்குநன் தொடர்பு விவரங்கள் பின்வருமாறு கார்டு வழங்குநர் தொடர்பு விவரங்கள்
வழக்கமான முறைகளின் மூலம் கிடைத்த பதிலில் உங்களுக்குத் திருப்தி இல்லை என்றால், நீங்கள் மின்னஞ்சல் அனுப்பலாம்

**I)** வார்டு புள்ளிகள்

உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டைப்
பயன்படுத்துவதன் மூலம், தானாகவே நீங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் ரிவார்டுகள் திட்டத்தில் பதிவு செய்யப்படுவீர்கள். உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு மூலம் நீங்கள் பரிவர்த்தனை மேற்கொள்ளும் போது, அந்தப் பரிவர்த்தனையின் மதிப்பு மற்றும் வாங்குதல் வகைப்பிரிவைப் பொறுத்து, உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு கணக்கில் ரிவார்டு புள்ளிகள் வரவு வைக்கப்படும். இந்த ரிவார்டு புள்ளிகளை ஒன்றாகச் சேர்த்து, மற்ற வாங்குதல்களுக்குத் திருப்பிச் செலுத்துவதற்குப் பயன்படுத்தலாம் அல்லது அவ்வப்போது ஒன்கார்டு செயலியில் காண்பிக்கப்படும் அற்புதமான சலுகைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். ரிவார்டுகள் திட்டத்தைப் பற்றிய கூடுதல் விவரங்களைக் காண விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் பார்க்கவும்.
**J)** சிறப்புக் குறிப்புக் கணக்கு (**SMA**) மற்றும் செயல்படாத சொத்து (**NPA**) என வகை

ப்படுத்துதல்

இங்கேயுள்ள தேதியில் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு வடிவத்தில் சவுத் இந்தியன் பேங்க் லிமிடெட் வழங்கிய நிதி உதவி/கிரெடிட் வசதி தொடர்பாக, தவணைத் தேதிகள், கணக்குகளை நடத்துவதன் போக்கில் கடன் பெறுபவர்களின் கணக்குகளை சிறப்புக் குறிப்புக் கணக்கு (“SMA”) அல்லது செயல்படாத சொத்து (“NPA”) என வகைப்படுத்துவது பற்றிய கருத்தாக்கங்கள் மற்றும் விளக்க உதாரணங்களை (கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு) புரிந்து கொண்டேன் என்பதை இதன் மூலம் நான் உறுதிப்படுத்துகிறேன்.

தவணைத் தேதிகள் மற்றும் SMA / NPA வகைப்படுத்தல் தேதிகள் பற்றிய விவரக்குறிப்பு பற்றிய கருத்தாக்கங்கள் / தெளிவுபடுத்தல்கள் / விளக்க உதாரணங்கள்

நிலுவைத் தொகைகள்: நிலுவைத் தொகைகள் என்பது, கடன் வசதி ஒப்புதலுக்கான விதிமுறைகளின்படி நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்த வேண்டிய, கடன் கணக்கின் அசல் / வட்டி / விதிக்கப்படும் ஏதேனும் கட்டணங்களைக் குறிக்கும்.

ஓவர்டியூ: ஓவர்டியூ என்பது, கடன் வசதி ஒப்புதலுக்கான விதிமுறைகளின்படி நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்த வேண்டிய, ஆனால் செலுத்தப்படாத கடன் கணக்கில் உள்ள அசல் / வட்டி / விதிக்கப்படும் கட்டணங்களைக் குறிக்கும். வேறு விதமாகக் குறிப்பிடுவது என்றால், எந்தவொரு கடன் வசதியின் கீழும் வங்கிக்கு செலுத்த வேண்டிய எந்தத் தொகையும், வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட தவணைத் தேதியில் செலுத்தப்படாவிட்டால், அது ‘ஓவர்டியூ’ ஆகும்.

கடன் வழங்கும் நிறுவனம் (அதாவது, சவுத் இந்தியன் வங்கி) கடன் கணக்குகளில் உள்ள தொடக்க அழுத்தத்தை, உடனடி தவறுதல் நிலையை, SMA என வகைப்படுத்துவதன் மூலம் அடையாளம் காணும். SMA வகையை வகைப்படுத்தலின் அடிப்படை பின்வருமாறு:

| காலக் கடன்கள்/கிரெடிட் கார்டு தன்மையில் கடன்கள் | |
|---|---|
| SMA துணை வகைப்பிரிவுகள் | வகைப்படுத்தலுக்கான அடிப்படை = அசல் அல்லது வட்டி அல்லது வேறு ஏதேனும் தொகை முழுமையாகவோ அல்லது பகுதியளவிற்கோ ஓவர்டியூ ஆக உள்ளது |
| SMA-0 | 30 நாட்கள் வரை |
| SMA-1 | 30 நாட்களுக்கு மேல், 60 நாட்கள் வரை |
| SMA-2 | 60 நாட்களுக்கு மேல், 90 நாட்கள் வரை |

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பேமெண்ட் தவணைத் தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் செலுத்த வேண்டிய குறைந்தபட்சத் தொகையை முழுமையாகச் செலுத்தவில்லை என்றால், அந்தக் கிரெடிட் கார்டு கணக்கு செயல்படாத சொத்தாகக் கருதப்படும்.

தவணைகளைச் செலுத்துவதில் தாமதம் / செலுத்தாமல் இருப்பதன் அடிப்படையில் ஒரு கணக்கை SMA வகையிலிருந்து NPA வகைக்கு மாற்றுவதற்கான விளக்கம் மற்றும் தொடர்ந்து நாளின் இறுதிச் செயல்பாட்டில் நிலையான வகைப்பிரிவிற்கு மேம்படுத்துதல்:

| பேமெண்ட் தவணைத் தேதி | பேமெண்ட் தேதி | பேமெண்ட் கவர்கள் | மிகப் பழைய தவணையின் நாட்கள் நாட்களில் நிலுவைத் தொகை | SMA / NPA வகைப்படுத் துதல் | தேதி முதல் SMA / SMA வகுப்புத் தேதி | NPA வகைப் படுத் துதல் | NPA தேதி |
|---|---|---|---|---|---|---|---|
| 01.01.2022 | 01.01.2022 | 01.01.2022 வரையிலான மொத்த நிலுவைத் தொகைகள் | 0 | Nil | NA | NA | NA |
| 01.02.2022 | 01.02.2022 | 01.02.2022 அன்று பகுதியளவு செலுத்தப்பட்ட நிலுவைகள் | 0 | SMA 0 | 01.02.2022 | NA | NA |
| 01.02.2022 | 01.02.2022 | 01.02.2022 நிலுவைத் தொகை முழுமையாக செலுத்தப்படவ --ில்லை | 2 | SMA 0 | 01.02.2022 | NA | NA |
| 01.03.2022 | | 01.02.2022 நிலுவைத் தொகை முழுமையாக செலுத்தப்படவில் லை<br>01.03.2022 EOD -இல் 01.03.2022 அன்றும் நிலுவையில் உள்ளது | 29 | SMA 0 | 01.02.2022 | NA | NA |
| | | 01.02.2022 -இன் நிலுவைத் தொகை முழுமையாக செலுத்தப்பட்டது.<br>01.03.2022 -க்கான நிலுவைத் தொகை EOD 01.03.2022 -இல் லைசெலுத்தப்படவில் ல. | 1 | SMA 0 | 01.03.2022 | NA | NA |
| | | EOD 03.03.2022 - இல் 01.02.2022 மற்றும் 01.03.2022 - இன் முழு நிலுவைத் தொகைகள் செலுத்தப்படவி ல்லை | 31 | SMA 1 | 01.02.2022/ 03.03.2022 | NA | NA |
| | | 01.02.2022 -இன் நிலுவைத் தொகை முழுமையாக செலுத்தப்பட்டது. 01.03.2022 -க்கான நிலுவைத் தொகை EOD 01.03.2022 இல்செலுத்தப்படவில் லை. | 1 | SMA 1 | 01.03.2022 | NA | NA |
| 01.04.2022 | | EOD 01.04.2022 -இல் 01.02.2022, 01.03.2022 -இன் நிலுவைத் தொகைகள் மற்றும் 01.4.2022-க்கான தவணைத் தொகை ஆகியவை செலுத்தப்படவில்லை | 60 | SMA 1 | 01.02.2022/ 03.03.2022 | NA | NA |
| | | EOD 02.04.2022 -இல் 01.02.2022 முதல் 01.04.2022 வரைக்கான நிலுவைத் தொகைகள் செலுத்தப்படவில்லை | 61 | SMA 2 | 01.02.2022/ 02.04.2022 | NA | NA |
| | | EOD 01.05.2022 -இல் 01.02.2022 முதல் 01.05.2022 வரைக்கான நிலுவைத் தொகைகள் செலுத்தப்படவில்லை | 90 | SMA 2 | 01.02.2022/ 02.04.2022 | NA | NA |
| | | EOD 02.05.2022 -இல் 01.02.2022 முதல் 01.05.22 வரைக்கான நிலுவைத் தொகைகள் செலுத்தப்படவில்லை | 91 | NPA | NA | NPA | 2.05.2022 |
| 2.06.2022 | 2.06.2022 | EOD 01.06.2022 - இல் 01.02.2022 இன் நிலுவைத் தொகைகள் முழுமையாக செலுத்தப்பட்டன | 93 | NPA | NA | NPA | 2.05.2022 |
| 01.07.2022 | 01.07.2022 | EOD 01.07.2022 -இல் மொத்த நிலுவைத் தொகையும் 01.03.2022 மற்றும் 01.04.2022 செலுத்தப்பட்டது | 62 | NPA | NA | NPA | 2.05.2022 |
| 01.08.2022 | 01.08.2022 | EOD 01.08.2022 -இல் 01.05.2022 மற்றும் 01.06.2022 -இன் மொத்த நிலுவைத் தொகையும் செலுத்தப்பட்டது | 32 | NPA | NA | NPA | 2.05.2022 |
| 01.09.2022 | 01.09.2022 | EOD 01.09.2022 -இல் 01.07.2022 மற்றும் 01.08.2022 -இன் மொத்த நிலுவைத் தொகையும் செலுத்தப்பட்டது, ஆனால் 01.09.2022 - இன் நிலுவைத் தொகை செலுத்தப்படவில்லை | 1 | NPA | NA | NPA | 2.05.2022 |
| 01.10.2022 | 01.10.2022 | 01.09.2022 மற்றும் 01.10.2022 -இன் மொத்த நிலுவைத் தொகையும் செலுத்தப்பட்டது | 0 | ஓவர்டியூ இல்லாத நிலையான கணக்கு | NA | NA | 01.10.2022 முதல் ஸ்டாண் டர்ட் |

மேற்கூறிய சில உதாரணங்கள் விளக்கம் அளிக்கும் நோக்கமுடையவை, அவை பொதுவான காட்சிகளை உள்ளடக்கிய முழுமையான தன்மை கொண்டவை அல்ல, மேலே குறிப்பிடப்பட்ட விஷயங்களில் RBI வழங்கும் IRACP விதிமுறைகள் மற்றும் தெளிவுபடுத்தல்களே இறுதியானவை என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

முக்கியமான ஒழுங்குமுறைத் தகவல்

i) உங்கள் SIB ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டு இந்தியா மற்றும் வெளிநாடு இரண்டிலும் பயன்படுத்த செல்லுபடியாகும். இருப்பினும், நேபாளத்திலும், பூட்டானிலும் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு இது செல்லுபடியாகாது.

ii) இணைய வர்த்தகப் போர்ட்டல்கள் மூலம் அந்நியச் செலாவணி வர்த்தகம் செய்வதற்கு அனுமதி இல்லை. ஏதேனும் மீறல்கள் ஏற்பட்டால் அல்லது இணங்கத் தவறினால், அபராத நடவடிக்கை மற்றும்/அல்லது கார்டு மூடப்படுவதற்கு நீங்கள் பொறுப்பாவீர்கள்.

உறுதிமொழி மற்றும் ஒப்புதல்

ஒன்கன்யூமர் சர்வீஸ் பிரைவேட் கோ லிமிடெட் உடனான கோ-பிராண்டட் கூட்டாண்மை மூலம் வங்கி வங்ழகிய **SIB** ஒன் கோ -பிராண்டட் கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பித்துள்ளேன் என்பதை இதன்மூலம் நான் ஒப்புக்கொள்கிறேன்**,** மேலும் நான் **18** வயதுக்கு மேற்பட்ட குடியுமை பெற்ற இந்தியன் என்றும் உறுதியளிக்கிறேன். விண்ணப்பத்தின் ஒரு பகுதியாக வழகப்பட்ட அனைத்து விவரகளும்**,** தகவல்களும் உண்மை யானவை **,** சரியானவை மற்றும் முழுமையானவை என்றும்**,** இந்த விவரங்களை நேரடியாகவோ அல்லது மூன்றாம் தரப்பு முகவர் மூலமாகவ சரிப்பாக்க வங்கி மற்றும்/அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநருக்கு உரிமை உண்டு என்றும் நான் உறுதியளிக்கிறேன். மேலும்**,** வங்கி மற்றும்/அல்லது அதன் அங்கீகக்கப்பட்ட சேவை வழகுந, எந்தக் காரணமும் கூறாமல் இந்த கார்டுக்கான விண்ணப்பத்தைத் தனது சுயாதீனமான சார்ந்த விருப்பத்தின் பேரில் அனுமதிக்கலாம் அல்லது நிராகக்கலாம் என்பதையும் புரிந்துக்கொள்கிறேன். முதலில் சமப்பிக்கப்பட்ட எனது விண்ணப்ப ஆவணகளில்
ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் வங்கி மற்றும்/அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநருக்குத் தெரிவிக்கவும்**,** இந்த விண்ணப்பத்தைச் செயலாக்க மற்றும்/அல்லது **SIB** ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டைத் தொடந்து உபயோகிக்கத் தேவைப்படும் கூடுதல் தகவலை வழங்கவும் நான் உறுதியளிக்கிறேன்.
**SIB** ஒன் கார்டு-பிராண்டட் கிரெடிட் கார்டு தொடர்பாக நான் வழங்கிய எந்தவொரு விண்ணப்பப் படிவம் (படிவகள்) அல்லது தொடர்புடைய அல்லது இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களில் என்னால் வழங்கப்பட்டுள்ள எனது

தனிப்பட்ட அடையாளத் தகவல்கள் (**PII**) மற்றும் பிற தனிப்பட்டவை அல்லாத அடையாளத் தகவல்களை (**NII**) எனக்கு அறிவிக்காமல் **KYC** சரிபாத்தல், வங்கிக் கணக்கு அறிக்கை சரிப்பார்த்தல், கடன் ஆபத்து பகுப்பாய்வு மற்றும் எனது விண்ணப்பத்தை செயலாக்குவதற்கு மற்றும் அல்லது **SIB** ஒன் கோ-பிராண்டட் கிரெடிட் கார்டை பயன்படுத்துவதற்கு மற்றும்/ அல்லது வேறு ஏதேனும் சந்தைப்படுத்தல் நாட்களுக்குப் பொருத்தமானது என வகிதம் மற்றும்/அல்லது அதன்

அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநன் கருதுகின்ற தொடர்புடைய பிற நாட்களுக்காக வங்கியின் பிற கிளைகள், வங்கியின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள், கடன் தகவல் நிறுவனங்கள், மதிப்பீட்டு முகமைகள், சேவை வழங்குநகள், சேவை க் கூட்டாளர்கள் (ஏதே னும் காப்பட்பீடுக் கூட்டாளர்கள் உட்பட), பிற வங்கிகள் அல்லது நிதி நிறுவனகள், அரசு. ஒழுங்குமுறை அதிகாகள் அல்லது மூன்றாம் தரப்பின ஆகியோருக்கு வெளிப்படுத்துவதற்கு வங்கி மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநரை நான் அங்கீகரிக்கிறேன் மற்றும் எனது வெளிப்படையான ஒப்புதலை இதன்மூலம் வழகுகிறேன். ஒப்பந்தத்தின் தனியுடைமை மற்றும் தனியுமைக்கான சிறப்புமையை இதன்மூலம் குறிப்பாக நான் தள்ளுபடி செய்கிறேன்.